பக்கம்.

**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.491/2024**

**வா.சா.–1 – ,கணேசன் த/பெ.சுப்பையா**

**நாள். 24.03.2026**

**வா.சா.1 இன்று ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

நான் என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் அம்மாவின் சொத்தை பாகவிஸ்தீரணம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என் தாத்தாவுக்கு பிரதிவாதி ஒரே மகன் ஆவார். என் தாத்தாவுக்கு என் அம்மாவும் ஒரே மகள்தான். எனக்கு தற்போது 60 வயது ஆகிறது. என் அம்மா பிரதிவாதிக்கு அக்கா ஆவார். என் மாமா சொத்தில் பாகவிஸ்தி கேட்டுதான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என் அம்மா, அப்பா தற்போது உயிருடன் இல்லை. முதலில் என் அப்பா இறந்தார். வருடம் ஞாபகம் இல்லை. என் அப்பாஉடல்நிலை சரியில்லாமல் இறந்தார். என் அப்பா இறக்கும் போது நான் சிறு பையனாக இருந்தேன். அதனால் எதனால் இறந்தால் என தெரியவில்லை. எனது அம்மா என் அப்பா இறந்து 2,3 வருடங்கள் கழித்து இறந்து விட்டார். என் அம்மா 1978ம் வருடம் இறந்தார். 2 மற்றும் 3ம் வாதிகள் எனது தங்கைகள் ஆவார்கள். என் அம்மா இறக்கும் போது 3ம் வாதி ஈஸ்வரிக்கு 2 வயது இருக்குமா என்றால் நான் சிறுபிள்ளையாக இருந்ததால் எனக்கு தெரியவில்லை. என் அப்பா வழி பூர்வீக சொத்துக்கள் எதுவும் இல்லை. என் அம்மா, அப்பா இறந்த பின்பு எனது மாமா வளர்த்தார் என்றால் இல்லை, என் தாத்தாதான் வளர்த்தார். என் தாத்தா 1994ம் வருடம் இறந்தார். என் தாத்தாவை பிரதிவாதி ராமசாமிதான் பராமரித்து வந்தார் என்றால் சரிதான். என் அம்மாவுக்கு என் தாத்தா 40 பவுன் நகை போட்டு கல்யாணம் செய்து கொடுத்தார் என்றால் அவ்வாறு இல்லை. தாவா சொத்தை என் தாத்தா எழுதி கொடுக்கவில்லை என்றாலும் வாய்க்கரலாக கொடுத்துள்ளார் என்றால் சரிதான். பிரதிவாதிக்கு 85 வயது இருக்கும். என் மாமாவின் மூத்த பையனுக்கு 35 வயது இருக்கும் என்றால் சரிதான். என்னையும், என் தங்கைகளையும் வளர்ப்பதற்காகத்தான் எனது மாமா அவரது குழந்தை பெறாமல் தள்ளி போட்டு வந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது பெரியப்பா உள்ளார் ,அவர் என்னையும், என் தங்கைகளையும் பராமரிக்கவில்லை. எனக்கு கல்யாணம் என் மாமா செய்து வைத்தார் என்றால் இல்லை. நாங்களாக முடித்துக் கொண்டோம். என் தங்கைகளுக்கு திருமணத்திற்கு நகை சீர்வரிசை என் மாமா செய்தார் என்றால் சரியல்ல. என் மகன் கேரளாவில் வேலை செய்யவில்லை. தற்போது பெட்ரோல் பங்கில் வேலை செய்கிறார். அதற்கு முன்பு கோயம்புத்தூரில் வேலை செய்து வந்தார். என்

மகன் படிப்பை முடித்தவுடன் கொஞ்ச நாட்கள் எங்களுடன் இருந்தார். அதன் பின்பு என் மனைவி அவரை வேலைக்கு வெளியூருக்கு அனுப்பி விட்டார். நான் விவசாய கூலி வேலை செய்கிறேன். என் மாமா ஏகப்பட்ட சொத்துக்களை விற்றுள்ளார். அப்போது நான் தடுக்கவில்லை என்றால் என் தாத்தா உயிருடன் இருந்ததால் நான் தடுக்கவில்லை. என் தாத்தா இறந்த பின்பும் பிரதிவாதி விற்ற சொத்துக்களை நான் தடை செய்யவில்லை என்றால் சரிதான். அவர் சொத்துக்களை விற்றதே என்னால்தான் என்றால் சரியல்ல. என் மீது குற்ற வழக்கு இருந்ததா என்றால் ஒரு அம்மாவிடம் தங்க நகைகளை அத்ததாக என் மீது வழக்கு இருந்தது. அந்த வழக்கில் திருடு போன நகைகளை வாங்கி கொடுத்துதான் அந்த வழக்கை சமரசமாக முடித்தோம் என்றால் சரிதான். அந்த நகைகளை வாங்குவதற்காகத்தான் பிரதிவாதி சொத்துக்களை கிரையம் செய்து கொடுத்தார் என்றால் சரியல்ல. என் அம்மா இருந்த காலத்தில் சொத்துக்களில் எந்த வித பாகமும் கேட்கவில்லை என்றால் சரிதான். என் அம்மாவுக்கு நகையாகவும், என் மாமாவிற்கு நிலங்களாக கொடுத்ததால்தான் என் அம்மா பாகம் கேட்கவில்லை என்றால் சரியல்ல. என் அம்மா திருமணத்தின் போது சட்டப்படி சரிபாகம் உரிமை கேட்க உரிமையில்லை என்றால் சரியல்ல. நான் செய்த தவறுகளுக்காக என் மாமா சொத்துக்களை கிரையம் விற்றார் என்றாலும், என் தங்கைகளுக்கு சீர்வரிசை செய்துள்ளார் என்பதாலும் எனக்கு பாகம் கேட்க உரிமையில்லை என்றால் சரியல்ல. வாய்க்கரால் பாகம் பிரித்ததில் எனக்கு உடன் பாடு இல்லை என்றால் நான் மேஜராகி 3 வருடத்தில் வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றாலும் தற்போது காலதாமதமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு தாவா வழக்கில் எந்த பாக உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. தாவா வழக்கில் பாகம் கேட்க என் தங்கைகளுக்கு சீர்வரிசை செய்யப்பட்டதால் விருப்பம் இல்லை என்றாலும் அவர்களுக்கு தெரியாமல் தாவா வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை – இல்லை.</u>**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.03.24 20:59:57 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.